**செய்தி வெளியீடு எண்: 953** **நாள்: 11.07.2024**

செய்தி வெளியீடு

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 8 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024 நவம்பர் 10 முதல் 17 வரை அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் நடைபெற உள்ள உலக கேரம் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் பங்கேற்க உள்ள மூன்று கேரம் விளையாட்டு வீராங்கனைகள் செல்வி. கே. நாகஜோதி, செல்வி. எம். காசிமா, செல்வி. வி. மித்ரா மற்றும் பயிற்றுநர் திரு. மரியா இருதயம் ஆகியோருக்கு செலவீனத் தொகையாக தலா ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலைகளையும்,

மேலும் நியூசிலாந்தில் 2024 ஜூலை 16 முதல் 19 வரை நடைபெற உள்ள ஜூனியர் காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கவுள்ள செல்வி. ஜாய்ஸ் அஷிதா அவர்களுக்கு செலவீனத் தொகையாக ரூ. 2.00 லட்சத்திற்க்கான காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu